# 04

# பொருளியல்

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 12

**சந்தையில் உற்பத்தி நிறுவனங்களின் தர்க்கரீதியான நடத்தையைக் கண்டறிவார்**

## கட்டமைக்கப்பட்ட வினாக்கள்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

01.

(i) உற்பத்தி நிறுவனங்களை விளக்கி அதன் பிரிவுகள் 4ஐ தருக.

(ii) குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு என்றால் என்ன என்பதை வரையறுக்க.

(iii) உற்பத்தியுடன் தொடர்புடைய பிரதான இரு கால கட்டங்களை சுருக்கமாக விளக்குக.

(iv) குறுங்கால உற்பத்தி செயன்முறை மற்றும் நீண்டகால உற்பத்தி செயன்முறையின் நடத்தைக்கு பொருந்தக்கூடிய சட்டதிட்டங்களை சுருக்கமாக விளக்குக.

(v) அதிகரித்து செல்லும் அளவுதிட்ட விதி என்பதை விளக்கி அதில் தாக்கம் செலுத்தும் காரணிகளை குறிப்பிடுக.

02.

(i) பொருளாதார நெறிமுறை உற்பத்தி மதிப்பீடு எவ்வாறு மதிப்பிடப்படுகின்றது?

(ii) நேர்ச் செலவு, நேரில் செலவு வரையறுத்து இவ்விரு உதாரணம் வீதம் தருக.

(iii) மூழ்கிய செலவு என்றால் என்ன? உதாரணம் தருக.

(iv) பின்வரும் தரவுகள் உற்பத்தி தொடர்பானவையாகும்.

| | |
|---|---|
| உற்பத்தி அலகுகள் | 5000 |
| அலகு விலை | ரூ.15 |
| மூலப்பொருள் செலவு | ரூ.2000 |
| எரிபொருள் செலவு | ரூ.1200 |
| கடனுக்கான வட்டி | ரூ.800 |
| இழந்த சம்பள வருமானம் | ரூ.300 |
| கூலியும் சம்பளமும் | ரூ.1300 |
| பொருளாதார தேய்வு | ரூ.300 |
| சாதாரண இலாபம் | ரூ.900 |

பின்வருவனவற்றை கணிப்பிடுக.

a) நேர்ச் செலவு
b) நேரில் செலவு
c) கணக்கியல் இலாபம்
d) பொருளியல் இலாபம்

03.

(i) பாடசாலை நிலத்தில் பயிர்ச்செய்கை செய்தல் எனும் அரச கொள்கைப்படி மரக்கறி பயிர்ச் செய்கை செய்வதற்கு உங்களுக்கு ஒப்படைக்கப்பட்டது என நினைத்து இதன் போது ஏற்படும் நிலையான செலவு மற்றும் மாறும் செலவு 2 வீதம் எழுதுக.

(ii) பத்திரிகை உற்பத்தி தொடர்பாக ஏற்பட்ட நிலையான செலவு ரூ.200 ஆகவும் குறித்த உற்பத்தி மட்டம் தொடர்பாக ஏற்படும் மொத்த மாறும் செலவு பின்வருமாறு:

| உற்பத்தி (அலகுகள்) | மொத்த மாறும் செலவு |
|---|---|
| 1 | 60 |
| 2 | 80 |
| 3 | 90 |
| 4 | 110 |
| 5 | 150 |
| 6 | 240 |

a) மொத்த செலவு
b) சராசரி நிலையான செலவு
c) சராசரி மாறும் செலவு
d) சராசரி மொத்த செலவு
e) எல்லைச் செலவு

III. குறைந்த செலவு எல்லை விளைவு விதி என்பதால் கருதப்படுவது யாது?

IV. அளவுத்திட்ட சிக்கனம் மற்றும் அளவுத்திட்ட சிக்கனமின்மை என்றால் என்ன?

V. அளவுத்திட்ட சிக்கனம் தோன்றுவதற்கான காரணங்கள் யாவை?

04.

(i) சந்தை அமைப்புக்கள் வேறுபடுவதற்கான காரணிகள் யாவை?

(ii) நிறைபோட்டி மற்றும் தனியுரிமை போட்டிச் சந்தைகளுக்கிடையிலான வேறுபாடு யாது?

(iii) தனியுரிமை சந்தையில் நுழைவதற்கு பிரவேசத் தடைகள் காணப்படுகின்றது என்பதனால் கருதப்படுவது யாது?

(iv) இயற்கை தனியுரிமை என்பதால் விளங்கிக் கொள்வது யாது?

(v) நிறை போட்டி நிறுவனம் (ஒன்றின் கேள்விக் கோடு) கிடையச்சு சமமான கேள்விக் கோடாக காணப்படுவதுடன் அதில் உள்ள தொழிலின் கேள்விக் கோடு இடமிருந்து வலமாக செல்லும் கேள்விக் கோடாக காணப்படுவது ஏன்?

05.

(i) நிறைபோட்டி நிறுவனத்தின் $MR = MC$ நிபந்தனையின் கீழ் $MR$ இற்கு பதிலாக விலை பரிந்துரைக்கப்படுவது ஏன்?

(ii) குறுங்காலத்தில் உற்பத்தி நிறுவனமொன்று இலாபம் உழைக்கும் மட்டத்தை எவ்வாறு நிர்ணயிக்கின்றது?

(iii) குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனங்கள் நட்டத்தை அடைந்தாலும் தொடர்ந்து உற்பத்தியை மேற்கொள்வது ஏன்?

(iv) குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனமொன்று அசாதாரண லாபம் உழைக்கும் போது தொடர்ந்து நீண்ட காலத்தில் சாதாரண லாபத்தையே உழைப்பதற்கான காரணம் யாது?

(v) நிறை போட்டி நிறுவனத்தின் குறுங்கால நிரம்பல் கோட்டை வரைபட உதவியுடன் விளக்குக.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH